# அண்ணாவும் ஆங்கிலமும்!



**நேற்றைய தொடர்ச்சி**

சட்டமன்றத்தில் அண்ணா ஆற்றிய உரைகள் மற்றும் சாதனைகள் அளப்பரியன. ஒரு முறை எதிர்க்கட்சித் தலைவர் வரிசையில் இருந்த கே. விநாயகம் (காங்) எழுந்து, அண்ணாவைப் பார்த்து, "Your days are numbered .. (counted) உங்கள் ஆட்சியின் நாள்கள் எண்ணப்படுகின்றன என்று ஆவேசமாக, தையலாளையாகப் பேசினார். முதல்வர் அண்ணா அமைதியாக எழுந்தார். ஆவலாம் ஏதுமில்லாமல் விநாயகத்துக்குப் பதில் சொன்னார். "என் நண்பர் விநாயகம் அவர்கள், பைபிளில் இடம்பெறும் வசனத்தை, சேக்ஸ்பியர் நாவலில் இருந்து எடுத்துச் சில வரிகளைக் கையாண்டார். நான் அவருக்குச் சொல்லுவேன்...my steps are Measured... என் அடிகள் அளக்கப்படுகின்றன என்றார் அண்ணா .

1963 ஆம் ஆண்டு மே திங்களில் (Name change of Madras State to Tamilnadu (may – 1963 Debate in Rajya Sabha) இராஜ்யசபாவில் "மெட்ராஸ் ஸ்டேட் "சென்னை மாகாணம் என்பதைத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிப் பல வரலாற்றுச் ஆவணங்களை, ஆதாரங்களைச் சுட்டிக்காட்டினார் . பலத்த எதிர்ப்பு காங்கிரஸ் தெரிவித்தது. எம்.என்.லிங்கம் என்ற காங்கிரசு உறுப்பினர் "தமிழ்நாடு எனப் பேர் மாறினால், நீங்கள் என்ன இலாபம் அடைந்து விடப் போகிறீர்கள்? எனக் கேட்டார்.

"நாடாளுமன்றத்தின் மாநிலங்களவைக்கு, "இராஜ்யசபா என்றும், மக்களவைக்கு "லோக்சபா என்றும், ஜனாதிபதிக்கு "இராஷ்டிரபதி என்றும் பெயர் மாற்றம் செய்திருக்கிறீர்களே?...... இதனால், நீங்கள் கண்ட இலாபம் என்ன? என்று "அண்ணா திருப்பிக் கேட்டதும், காங்கிரஸ் உறுப்பினர்களிடமிருந்து பதில் ஏதுமில்லை. 1967 இல் ஆட்சிக்கு வந்த அண்ணா சென்னை மாநிலம் என்பதை நீக்கித் தனித் தீர்மானம் சட்டமன்றத்தில் கொண்டு வந்து, அனைவரின் ஒப்புதலோடு தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார்.

இந்தி மொழி திணிப்பு மற்றும் மொழிகளுக்கு எதிராக ஒன்றிய அரசு கொண்டு வந்த போது, திமுக அதனை கடுமையாக எதிர்த்து வாதிட்டது. கருத்துகள் வாயிலாகவும், பாராளுமன்ற மூலமாகவும், மக்கள் எழுச்சி வாயிலாகவும், போராட்டங்கள் பெரிதாக உருவெடுத்தன. இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும் என்று உறுதிமொழி தந்தார் நேரு. அதற்கு மாறாக ஆட்சிமொழிச் சட்டம் 13–04–1963இல் கொண்டு வந்து, அதன்படி 25–01–1965 முதல் இந்தி மட்டுமே ஆட்சி மொழி (Hindi Shall be official Language) அதற்கு துணை மொழியாக ஆங்கிலத்தைப் பயன் படுத்தலாம் அல்லது பயன்படுத்தாமல் விட்டு விடலாம் என்று திட்டமிட்டு இந்திக்கு மகுடம் சூட்ட சட்டம் கொண்டு வரப்பட்டது. அதனைக் கடுமையாக எதிர்த்து அண்ணா ஆங்கிலத்தில் பேசிய பேச்சுகள், எழுத்துகள் இன்றும் என்றும் பேசப்படுவதாகக் குறிப்பிடுகிறது உயிர் பெற்றிருக்கின்றன.

"தமிழ்நாட்டில் தமிழ் தான் அரசு மொழி. ஆங்கிலம் இந்திய நாட்டின் இணைப்பு மொழி என்று இருந்தால் போதும் என்பது எனது திட்டவட்டமான கருத்து. இதில் தமிழ்நாடு மிகவும் தெளிவு படுத்தியிட்டது. ஆங்கிலம் தொடர்பு மொழியாக பயன்படுத்தப்படுகிறது. உரிமைக்குத் தமிழ்; உறவுக்கு ஆங்கிலம் என மொழி பிரச்சனையில் குரல் கொடுத்தவர் அண்ணா.

"எல்லோரும் இன்புற்று வாழும் இடம் தான் என் இலட்சிய பூமி! ஒருவரை ஒருவர் அழுத்தாமல், ஒருவரை ஒருவர் சுரண்டாமல், எல்லோருக்குமாகவும் நான்; எனக்காக எல்லாரும் " என்ற முறையில் சமூக அமைப்பு அமையுமானால் ,அதுதான் என் இலட்சிய பூமி. அரசியல் முறையில் Federalism – கூட்டாட்சி என்று சொல்லலாம். பொருளாதாரத் துறையில் Socialism – சமதர்மம் என்று சொல்லலாம். அரசியல் அமைப்பு முறைப்படி அதை democracy – சனநாயகம் எனச் சொல்லலாம். இலக்கியத் துறையில் அதை Idealism என்று கூறலாம். இவ்வாறு இன்புற்றிருக்கும் இந்தப் பூமி தான் என் இலட்சிய பூமி என்று அண்ணா விருகம்பாக்கம் மாநாட்டிலே 1967 ஜனவரி 1 அன்று அண்ணா பேசினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இன்றைய முக்கிய குறிக்கோள் யாவை? என்று அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் இல்லஸ்ட்ரேட்ட வீக்லி ஆங்கில எழுத்தாளர் வினா எழுப்பினார். அதற்கு அண்ணா உண்மையான கூட்டாட்சி அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், மாநிலங்களுக்குக் கூடுதலான சுயாட்சி உரிமை சிறுபான்மையினருக்குச் சரி சம விகிதப் பிரதிநிதித்துவ முறை, ஜனநாயக சோசலிசம், சாதியை ஒழித்தல், என்றெல்லாம் சொன்னார். மேலும், கூட்டாட்சி முறை மாநிலங்களுக்கு முழு சுயாட்சி முறை, சம தர்மக் குறிக்கோள் – இவைகள் எல்லாம் எங்கள் கோட்பாடுகள் என்று விளக்கம் சொன்னார். (Federalism full attonomy for the states and egalitarianism – are these principles (Illustrated weekly of India) 26–09–1965)

1929 ஆம் ஆண்டு சுயமரியாதை சீர்திருத்த திருமணம் என்று அழைக்கப்படும் பகுத்தறிவு தழுவிய ஒரு புதிய வாழ்க்கை ஒப்பந்த முறை பெரியார் முதன் முதலில் அறிமுகம் செய்து நடத்திக் காட்டினார். பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967 ஆம் ஆண்டு மார்ச்சு – 6 இல் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா பொறுப்பேற்றார். மனத்தில் உறுதி ஏற்றிருந்த அவர் சுயமரியாதைனும் சீர்திருத்தச் திருமணங்களுக்குச் சட்டப் பூர்வ அங்கீகாரம் கொண்டு வர சட்ட முன் வடிவை உருவாக்க ஏற்பாடு செய்திருந்தார். அதனை அறிமுகப்படுத்தும் முன் விடுதலை ஆசிரியர் கி. வீரமணி மூலமாகப் பெரியாரின் பார்வைக்கு அனுப்பி வைத்தார். அச்சட்டத்தில் "... And Tying of Thali என்ற வாக்கியம் பெரியாரின் கவனத்தைக் ஈர்த்தது. அந்த வாக்கியத்தில் ஒரு திருத்தத்தைச் சொன்னார். "Or Tying of Thali ....... என்று மாற்றம் பெற வேண்டும் என்று.. அதாவது AND என்பதை நீக்கி OR என்ற வார்த்தை இடம்பெறத் திருத்தம் கூறி அனுப்பினார். தாலி கட்ட விரும்பினால் கட்டலாம்; கட்டாயம் இல்லை என்பது தான் பெரியார் சொன்ன சீர்திருத்தம். அதனை ஏற்றுக்கொண்டு அண்ணா சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றி நடைமுறைப்படுத்தினார். ஆங்கிலத்தில் அழுத்தமாக – திருத்தமாக அமைய வேண்டும் என்பதற்காக பெரியாரின் கருத்தை ஏற்று முதல்வராக இருந்த அண்ணா அச்சட்டத்தை உருவாக்கிக் காட்டினார்.



**கவிஞர் தமிழ்தாசன்**
**- கழகத் தீர்மானக் குழுத் தலைவர்**

நம்முடைய மாநிலத்தின் பெயர் மதராஸ் அல்ல; தமிழ்நாடு என்பதாக மாற்றப்பட வேண்டும் எனத் தொடர்ந்து திமுக சார்பில் அண்ணாவும், கலைஞரும் சட்டமன்றத்தில் வலியுறுத்தி வந்தனர். ஆனால் , அன்றைய காங்கிரஸ் ஆட்சி நிர்வாகம் அதனைச் செய்ய மறுத்து வந்தது. அண்ணா முதலமைச்சரானதும் மதராஸ் மாநிலம் என்பதைத் "தமிழ்நாடு எனத் தமிழிலும், அவ்வாறே "Tamil Nadu என ஆங்கிலத்திலும் அழைக்கப்படவேண்டும் என்பதற்கான தீர்மானம் ஒன்றை (18.07–1967) சட்டமன்றத்தில் நிறைவேற்றி அதனை நடைமுறைப்படுத்தினார். அத்துடன், இந்தி ஒழிப்புத் தீர்மானத்தை நிறைவேற்றியதும், "தமிழகத்தில் எல்லாப் பள்ளிகளிலும், மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டுத் தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற இரு மொழி கொள்கைகளுக்கு இடமளித்து இந்தியை அறவே நீக்கி, இந்த இம்மன்றம் தீர்மானிக்கிறது (23–01–1968) என்று இரு மொழிக் கொள்கை தீர்மானத்தை சட்டமன்றத்தில் நிறைவேற்றினார். "தமிழ்நாட்டில் ஆட்சி மொழியாகத் தமிழும் ஆங்கிலமும் இருக்கும் எனச் சட்டம் கொண்டு வந்தார் அண்ணா.

1965 இல் அண்ணா பர்மா, சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் போன்ற நாடுகள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அங்குள்ள நிகழ்ச்சிகளில்கலந்து கொண்டு ஆங்கிலத்தில் அறிவார்ந்த உரை நிகழ்த்தினார். முதலமைச்சரான பிறகு, 1968 இல் ஐரோப்பியப் பயணம் மேற்கொண்டார். இத்தாலி சென்று வாடிகன் நகரில் போப் ஆண்டவரைச் சந்தித்துத் திருக்குறள் போன்ற தமிழ், ஆங்கில நூல்களைப் பரிசளித்துப் பிரான்சில் சுற்றுப்பயணம் முடித்து, அமெரிக்கா சென்றடைந்தார். அவர் யேல் பல்கலைக்கழகத்தில் உரையாற்றினார். அமெரிக்கா நியூ ஹேவன் நகரில் கல்வி நிறுவனம் ஒன்றை அறிவித்திருந்தபோது, சென்னை ஆங்கிலேய ஆளுநர் எலிகூயில் என்பவர் நிதி தந்து உதவினார். அந்தப் பெயர் தாங்கிப் பல்கலைக் கழகமாக வளர்ந்தது. விளையாட்டு அதில் பயின்ற மாணவர்களில் ஒருவர்செண்டர் தந்த நிதியின் காரணமாக அவர் பெயரால் சப் பெல்லோ சிப் என்று அறக்கட்டளை நிறுவி இருக்கிறார்.

அதன் பெயரிலே அண்ணா அவர்களுக்குச் சிறப்புச் சாதனையாளராக அண்ணா சொற்பொழிவு நிகழ்த்தியதைக் கொண்டு சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது. அவருக்கு பத்திரிக்கையான கூரியர், டவுன் கிரேயர் போன்ற பத்திரிகைகள் இந்தியாவில் தோன்றிய மிகப் பெரிய தலைவர் அண்ணா என்று பாராட்டி எழுதின. நேருக்குப் பிறகு மாபெரும் தலைவர் என்று பாராட்டியது ஐநா சபைக்குச் சென்று தலைமைச் செயலாளர் ..... உதாண்டவர்களைச் சந்தித்து ஆங்கிலத்தில் உரையாடினார் . ...... கோடியாக இந்தியா திரும்பினார் அவருக்கு வாழ் தமிழர்கள் மத்தியில் உரையாடி அவர்கள் ஏற்பாடு செய்திருந்த சங்க நிகழ்ச்சியில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார்.

மலேசிய பயணத்தின் போது, சிங்கப்பூர் முதல் ஆலோர்ஸ்டார் வரை பல இடங்களில் தமிழில் அரிய உரை நிகழ்த்தினார். "உங்களையும், என்னையும் இணைப்பது அரசியல் அல்ல; அது அரசியலுக்கு அப்பாற்பட்டது. நமது தாய் மொழியான தமிழே, இந்த இறுக்கமான இதய இணைப்பு...! என்று அண்ணா பேசி அன்பை வெளிப்படுத்தினார். அதேபோல், அரங்கங்கள்தோறும் நின்று ஆங்கிலத்தில் உரையாற்றி, கொட்டும் குற்றால அருவியில் குளிப்பது போல் சுகத்தை ஏற்படுத்தினார்!..

அமெரிக்க நாட்டின் பல்கலைக்கழக அழைப்பு வந்த போது, முதல்வர் என்ற முறையில் அண்ணா, இந்திய பிரதமர் இந்திரா காந்திக்குக் கடிதம் எழுதி, "நான் என்ன பேச வேண்டும்? என்று கேட்டிருந்தார். அதற்கு இந்திரா காந்தி எழுதிய அண்ணாவுக்கான பதில் கடிதத்தில்; "தாங்கள் என்ன வேண்டுமானாலும் பேசலாம்..! என்று பெருந்தன்மையோடு, அண்ணா அவர்களின் அறிவின் புலமையை உணர்ந்து குறிப்பிட்டு இருந்தார். அமெரிக்கா சென்ற அண்ணா அவர்கள் இந்தியாவின் பெருமையை இமயம் போல் உயர்த்திக் காட்டிப் பல சிறப்புகளைக்கூறித் திரும்பினார்.

1965 இல் அண்ணா பர்மா, சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் போன்ற நாடுகள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அங்குள்ள நிகழ்ச்சிகளில்கலந்து கொண்டு ஆங்கிலத்தில் அறிவார்ந்த உரை நிகழ்த்தினார். முதலமைச்சரான பிறகு, 1968 இல் ஐரோப்பியப் பயணம் மேற்கொண்டார். இத்தாலி சென்று வாடிகன் நகரில் போப் ஆண்டவரைச் சந்தித்துத் திருக்குறள் போன்ற தமிழ், ஆங்கில நூல்களைப் பரிசளித்துப் பிரான்சில் சுற்றுப்பயணம் முடித்து, அமெரிக்கா சென்றடைந்தார். அவர் யேல் பல்கலைக்கழகத்தில் உரையாற்றினார். அமெரிக்கா நியூ ஹேவன் நகரில் கல்வி நிறுவனம் ஒன்றை அறிவித்திருந்தபோது, சென்னை ஆங்கிலேய ஆளுநர் எலிகூயில் என்பவர் நிதி தந்து உதவினார். அந்தப் பெயர் தாங்கிப் பல்கலைக் கழகமாக வளர்ந்தது. விளையாட்டு அதில் பயின்ற மாணவர்களில்

ஒருவர்செண்டர் தந்த நிதியின் காரணமாக அவர் பெயரால் சப் பெல்லோ சிப் என்று அறக்கட்டளை நிறுவி இருக்கிறார்.

அதன் பெயரிலே அண்ணா அவர்களுக்குச் சிறப்புச் சாதனையாளராக அண்ணா சொற்பொழிவு நிகழ்த்தியதைக் கொண்டு சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது. அவருக்கு பத்திரிக்கையான கூரியர், டவுன் கிரேயர் போன்ற பத்திரிகைகள் இந்தியாவில் தோன்றிய மிகப் பெரிய தலைவர் அண்ணா என்று பாராட்டி எழுதின. நேருக்குப் பிறகு மாபெரும் தலைவர் என்று பாராட்டியது ஐநா சபைக்குச் சென்று தலைமைச் செயலாளர் ..... உதாண்டவர்களைச் சந்தித்து ஆங்கிலத்தில் உரையாடினார் . ...... கோடியாக இந்தியா திரும்பினார் அவருக்கு வாழ் தமிழர்கள் மத்தியில் உரையாடி அவர்கள் ஏற்பாடு செய்திருந்த சங்க நிகழ்ச்சியில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார்.

அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அண்ணாவிடம், மாணவர் ஒருவர் "What is union?. " என்று கேட்டார். உடனடியாக "Union is onion என்று அறிஞர் அண்ணா பதிலளித்தார்.

யேல் பல்கலைக் கழகத்தில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், ஒருவர் "உங்கள் இயக்கத்தினருக்குக் "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரக் கொள்கையை "க எனும் முதல் எழுத்து தொடங்கிட வரிசைப்படுத்தியுள்ளீர்கள். அதனை ஆங்கிலத்தில் சொல்ல முடியுமா? என்று கேட்டார். அதற்கு அண்ணா உடனே, "Duty, Dignity, Disicipline என "D என்னும் ஆங்கில எழுத்தில் தொடங்கிடும் மூன்று வார்த்தைகளில் பதில் அளித்து, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

அண்ணா நூல்கள் படிப்பதில் தணியாத ஆர்வம் கொண்டவர். தமிழ் நூல்கள் போலவே, அயல் மொழி பெயர்ப்பு நூல்கள், ஆங்கில நூல்கள் எல்லாம் படிப்பார். அமெரிக்க நாட்டில் இதயப் புற்றுநோய் அறுவைச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தபோது, அறுவை சிகிச்சைக்கான நேரம் நெருங்கி விட்டது என்று மருத்துவர்களும், செவிலியர்களும் வந்து, அவர் தங்கியிருந்த நோயாளி அறையில் அவரைச் சூழ்ந்து கொண்டு அழைத்த போது, சற்றுப் பொறுங்கள்; நான் ஒரு நூலைப் படித்துக் கொண்டிருக்கிறேன்.. ஓர் அரை மணி நேரம் அனுமதி தாருங்கள்.... படித்து முடித்ததும் நான் வருகிறேன் ... என்று வேண்டுகோள் வைத்து அவர்களது இசைவைக் கேட்டவர். அப்படி மரண வேளையிலும் புத்தகப் பசி எடுத்திட,அவர் படித்துக் கொண்டிருந்த நூல் "The Master Christian "– by Marie Corelli எனும் தலைப்புப் பெயரில் வெளிவந்த ஆங்கில நாவலாகும்.

பழைய ஆங்கில நூல்கள் வாங்கிப் படிப்பதிலும், குறிப்பு எடுப்பதிலும் குன்றா ஆர்வம் படைத்தவராக இருந்தார். அதற்காகவே அடிக்கடி சைனா பஜார், பைகிராப்ட்ஸ் ரோடு, மயிலாப்பூர் போன்ற பழைய புத்தகங்கள் விற்கக் கூடிய இடங்களுக்குச் சென்று வருவார். ஈரோட்டில் பெரியார் வீட்டில் தங்கி குடியரசு, விடுதலை இதழ் துணை ஆசிரியராகப்பணியாற்றி வந்தபோது, இரயிலடிக்குச் செல்வார். அங்குள்ள "ஹிக்கின் பாதம் கடையில் அரிய தகவல்கள் அடங்கிய ஹிட்லர் பற்றிய ஆங்கில நூல் ஒன்றை கடைக்காரரிடம் கேட்டு வாங்குவார். இப்படியே சில நாட்கள் அதைப் புரட்டிப் பார்ப்பது போல் சில, சில பக்கங்களைப் படிப்பதும் பிறகு திருப்பிக் கொடுப்பதுமாகச் சில நாள்களில் முழுவதும் படித்து முடித்து விட்டுத் திருப்பிக் கொடுத்து விட்டார். அந்தப் புத்தகம் பற்றிய அருமை, பெருமைகளைப் பெரியாரிடம் கூறி வாங்க வேண்டும் என்று சொன்ன போது, "படித்த புத்தகத்தை ஏன் வாங்குகிறீர்கள்? என்று பெரியார் மறுத்ததாகவும் அதை வாங்க முடியாமல் சென்றதை எண்ணி, எண்ணி வருத்தப்பட்டதாகவும் அண்ணா எழுதியுள்ளார்.

1968 ஆம் ஆண்டு டிசம்பர் 30– ஆம் தேதி அண்ணா நீதிக் கட்சியின் பொன் விழாவில் கலந்து கொண்டு கடைசியாக ஆங்கிலத்தில் அனைவர் மனத்தை ஆட்கொள்ளும் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தியதை யாரும் மறக்க முடியாது. அதன் பின்னர் இறுதியாகச் சென்னையில் நடைபெற்ற கலைவாணர்சிலை திறப்பு விழாவில் (08–01–1969) கலந்து கொண்டார்.

இதே போல ஒரு சம்பவம் வெளிநாடு அண்ணா சென்றிருந்த போதும் நடந்தது. நிகழ்ச்சி ஒன்றுக்கு இரயில் பயணத்தில் இருந்தார். அதே இரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த ஆங்கிலேயர் ஒருவர்; அவசர, அவசரமாக அருகில் இருந்த அண்ணாவின்கால்களை மிதித்து விட்டுக் கீழே இறங்கி போனார். அண்ணா பேச வேண்டிய அரங்கிற்குச் சென்றார். யார் அவருடைய காலை மிதித்து விட்டு வந்தாரோ, அந்நபர் எதிரில் அமர்ந்திருந்ததைப் பார்த்தார் அண்ணா. கேட்டோர் அனைவரது இதயங்களைக் கிறங்கடித்த பேச்சைப் பேசி முடித்த அண்ணாவின் பேச்சைப் பாராட்டும் விதத்தில், அந்த நபர் அண்ணாவை சந்தித்து தன் வருத்தத்தைத் தெரிவிக்கும் விதத்தில் I am sorry என்றார். அது போல், தேநீர் அருந்தும் இடத்திலும் வந்து அதே வார்த்தையைச் சொன்னார். மேலும், இரயிலடிக்கு வந்து இரயில் ஏறும் போதும், அதே நபர் வந்து அதே வார்த்தையை மீண்டும் பயன்படுத்திக் கூறினார். அப்பொழுது அண்ணா காஞ்சிபுரம் நடேசன் முதலியாரிடத்தில் கூறிய அதே வரிகளைக் கூறி நகைச்சுவை ஏற்படுத்தினார்.

மாணவர் மத்தியில் ஒரு முறை பேசும்போது,ஆங்கிலத்தில் A,B,C,D எழுத்துகள் வராமல் 100 வார்த்தைகளை உங்களில் யாராவது சொல்ல முடியுமா? என்று அவர்களைப் பார்த்துக் கேட்டார். எவரும் சொல்லுவதற்கு முன் வரவில்லை. அண்ணா அவர்கள் one, two, three என்று ninety nine வரை கூறிவிட்டு நூறாவது சொல் வரும்போது Stop என்று சொன்னார். Hundred என்று சொன்னால், "e வந்துவிடும். ஆகவே, zero எனப் போட்டுக் கொள்ளுங்கள் என்று தன் அறிவின் வெளிச்சத்தை காட்டிப் பேசிய போது அரங்கமே கைத் தட்டலில் களைத்துப் போனது.

அதேபோல மாணவர்களிடத்தில் ஆங்கில இலக்கணத்தில் வரக்கூடிய vowels எனும் ஐந்து உயிரெழுத்துகள் வரக்கூடிய ஒரே ஆங்கில வார்த்தையைஉங்களால் சொல்ல முடியுமா? என்று கேட்டார். மாணவர்கள் எவ்விதமான பதில் கூறவில்லை. ஆனால், அண்ணா உடனே "FACETIOUS என்று கூறி அனைவரின் மனதில் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்தார்.

மற்றொரு நிகழ்ச்சியில் அண்ணாவைப் பார்த்து "ஆங்கிலத்தில் உள்ள 26 எழுத்துக்களும் இடம்பெறுகிற ஒரு வாக்கியத்தைஉங்களால் சொல்ல முடியுமா? என்று மாணவர்கள் கேட்டுவிட்டு, அண்ணாவின் முகத்தைப் பார்த்தபடி என்ன சொல்லப் போகிறார் என்று மெய்மறந்து இருந்தார்கள். சற்றும் காத்திராமல், "பட் என்று அண்ணா சொன்னார்.. "Pack My box with Five dozen Liquor Jugs கேள்வி கேட்ட மாணவர்கள் வாயடைத்து போய் விட்டார்கள்.

1968 ஆம் ஆண்டு டிசம்பர் 30–ஆம் தேதி அண்ணா நீதிக்கட்சியின் பொன்விழாவில் கலந்து கொண்டு கடைசியாக ஆங்கிலத்தில் அனைவரும் மனத்தை ஆட்கொள்ளும் விதத்தில் அரிய தோர் சொற்பொழிவு நிகழ்த்தியதை யாரும் மறக்க முடியாது! அதன் பின்னர் இறுதியாக சென்னை நடைபெற்ற கலைவாணர் சிலை திறப்பு விழாவில் தான் கலந்து கொண்டார்.

ஒருமுறை இங்கிலாந்து மாணவர்கள் அண்ணாவைச் சோதித்தனர். Because என்ற வார்த்தை மூன்று முறை தொடர்ந்து வரும்படி வாக்கியம் கூற முடியுமா? என்று கேட்டனர். உடனே அண்ணா "No Sentence can end with because, because, because is conjuction என்று சொன்னார். அதாவது ஒரு வாக்கியத்தின் இறுதியில் வராத சொல் ஏனென்றால்; ஏனென்றால், ஏனென்றால் என்பது இணைப்புச் சொல் என்றார். அண்ணாவின் ஆங்கிலப் புலமையை எண்ணி, எண்ணி வியந்தினர்.

நம்முடைய மாநிலத்தின் பெயர் மதராஸ் அல்ல; தமிழ்நாடு என்பதாக மாற்றப்பட வேண்டும் எனத் தொடர்ந்து திமுக சார்பில் அண்ணாவும், கலைஞரும் சட்டமன்றத்தில் வலியுறுத்தி வந்தனர். ஆனால் , அன்றைய காங்கிரஸ் ஆட்சி நிர்வாகம் அதனைச் செய்ய

இறுதியாக இந்தக் கட்டுரையில் கழகத் தோழர்களுக்கு அறிவுரை வழங்கிய அவருடைய செய்தியை அவருடைய மொழியிலேயே சொல்ல விரும்புகிறேன்.

" Go to the people; Live among them; Learn from them; Love them; Serve them ; Plan with them! Start with they know; Build on what they have! "

"அருமை தம்பி, மக்களிடம் சென்றிடு! அவர்களோடு வாழ்ந்திடு! அவர்களிடமிருந்து அறிந்திடு! அவர்களை நேசித்திடு! அவர்களுக்காக உன் உழைப்பை நல்கிடு! அவர்களோடு இணைந்து அவர்களுக்காக திட்டமிடு! அவர்களுக்கு தெரிந்ததிலிருந்து பணியைத் தொடக்கிடு! அவர்களிடம் இருப்பதி விருந்து தக்க வேலையைத் தொடர்ந்திடு! – அண்ணா

ஆம்; ஆங்கில மொழி அகிலத்தை ஆண்டு கொண்டிருக்கிறது. அந்த ஆங்கிலத்தை அண்ணாவின் நாவால் ஆளப்பட்டது !

அண்ணாவின் தம்பியான கலைஞர் அவர்கள் அண்ணா பேரால், கழகத் தொண்டர்களின் குருதி, நரம்பு, தசை, எலும்பு என இவைகளால் உருவாக்கப்பட்ட அண்ணா அறிவாலயத்தைக் கட்டி அரசியல் பாசறையாக நடத்தி வரப்படுகிறது.

திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் தளபதி ஸ்டாலின் அண்ணாவின் பெருமையை உலகறிய செய்துள்ளார்.

கடந்த 2023 அண்ணா பிறந்தநாளில் அவருடைய தம்பி கலைஞர் பெயரால் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை காஞ்சிபுரத்தில் தொடங்கி வைத்தார். அண்ணா பேரால் பல்வேறு திட்டங்கள், விருதுகள் வழங்கி சிறப்புகள் செய்யப்பட்டு வருகின்றன.

செப்டம்பர் 17 பெரியார் பிறந்த நாளை சமூகநீதி நாள் என்று அறிவித்து பெருமை சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் இங்கிலாந்து ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பெரியார் படம் திறந்து வைத்து முதல்வர் ஸ்டாலின் உலகப்புகழ் எய்திட செய்துள்ளார்.




சிவகங்கையில் மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான நிதி உதவியினை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி, திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன், மகளிர் திட்ட அலுவலர் கவிதப்ரியா, கூட்டுறவு இணைப்பதிவாளர் ராஜேந்திர பிரசாத் ஆகியோர் உள்ளனர்.



சிவகாசி சாட்சியாபுரத்தில் நடைபெற்ற ரயில்வே மேம்பால பணிகளை நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார். உடன் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்திரா, சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அசோகன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், மாநில வர்த்தக அணி செயலாளர் வனராஜா, சிவகாசி மாநகர செயலாளர் எஸ்.எ. உதயசூரியன், தி.மு.க. ஒன்றிய செயலாளர் விவேகன்ராஜ், செயற்குழு உறுப்பினர் எம்.ஏ.சந்திரன், சிவகாசி கிழக்கு ஒன்றிய செயலாளர் கோபி கண்ணன், தி.மு.க. செயலாளர் காளிராஜ், மாவட்ட விவசாய அணி துணை தலைவர் அக்னி வீரர் மற்றும் அதிகாரிகள், தி.மு.க. நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 147ஆவது பிறந்தநாளை முன்னிட்டு திருவுருவச் சிலைக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மாலை அணிவித்து சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டார்கள். உடன் மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாநில மீனவர் அணி செயலாளர் துறைமுகம் ப்ளோரன்ஸ், மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதியழகன், பகுதி செயலாளர் ரவீந்திரன், அதிர்ஷ்ட மணி, மண்டல தலைவர் பால குருசாமி, பொறியாளர் அணி மாநில துணை செயலாளர் அன்பழகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




திருச்செந்தூர் ஒன்றியம் பூச்சிக்காடு பஜாரில் குலசேகரப்பட்டினம் திருநெல்வேலி வழித்தடத்தில் புதிய பேருந்து வசதியினை மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் இயக்கி வைத்தார். உடன் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் எஸ்.ஆர்.எஸ் உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், முன்னாள் மாநில செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜே.பில்லா ஜெகன், ஒன்றிய செயலாளர் இளங்கோ, பூச்சிக்காடு கிளை செயலாளர் முருகேசன், செந்தில்குமார், சிதம்பரம், காயாமொழி ராஜதுரை, முத்துமாணிக்கம், பத்மநாதன், அமிர்தலிங்கம், மாவட்ட மகளிர் அணி தனலட்சுமி, ஊர் தலைவர் கௌதலை முத்து, ஸ்டான்லி பால்ராஜ், தகவல் தொழில்நுட்ப அணி மணிகண்டன் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்டம் பாலமேட்டில் அலங்காநல்லூர் வடக்கு ஒன்றிய கழக அலுவலகத்தினை மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. முன்னிலையில் திறந்து வைத்தார். உடன் மாவட்ட அவை தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர்கள் முத்தையன், தன்ராஜ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 147 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை அவுட்போஸ்டில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. கழக நிர்வாகிகளுடன் உறுதிமொழி ஏற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, அக்ரி கணேசன் சின்னம்மாள், மூவேந்திரன், வக்கீல் ராகவன், வைகை பரமன், முத்து கணேஷ், ஆறுமுகம், செல்லூர் அறிவுநதி, முத்து மோகன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.